மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போடவேண்டும். அந்த முயற்சிகள் சீராக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதை மட்டும் இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் நெல் கொள்முதல் விலை.

*வினா 45—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) தஞ்சை மாவட்டத்தில், நெல் கொள்முதலில் நிர்ணயிக்கப்பட்ட விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : 1979 சம்பா அறுவடையின் போது தஞ்சை மாவட்டத்தில் நெல்லின் விலைகள் பொதுவாக, மத்திய அரசு நிர்ணயித்திருந்த கொள்முதல் விலைகளுக்கு மேலாகவே நிலவிவந்தன. அங்குமிங்கும் சில பகுதிகளில் விலைகள் குறைந்தபோது, விவசாயிகளுக்கு ஆதரவு அளிக்கும் வகையில், இந்திய உணவுக் கழகத்தினாலும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தினாலும் தேவையான நேரடிக் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு விவசாயிகள் முன்வந்து அளித்த நெல் வாங்கப்பட்டது.

[முற்பகல் 9-10]

திரு. மா. மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசுத் துறையில் சென்ற ஆண்டு நெல் வாங்குவதை நிறுத்திய பிறகு ஓரளவுக்கு விலை ஏறியது. ஆனால், இந்த ஆண்டு, இப்பொழுது அரசிலே விலையைக் கூட்டிக் கொடுப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால், தஞ்சையில் 1975–76 இல் ஒரு குவிண்டாலுக்கு 105 ரூபாய் சன்ன ரகத்திற்கு வாங்கப்பட்டது. ஆனால், இன்றைக்கு விலை அதிகம் ஆகிய பிறகு 109 ரூபாய் என்று அரசு அறிவித்து இருக்கிறது. 1975-76-இல் 105 ரூபாய் விற்றது, பிறகு ஜனதா ஆட்சியில் 8 ரூபாயும், சரண்சிங் ஆட்சியில் 10 ரூபாயும் ஏற்றி ஆகமொத்தம் 18 ரூபாய் ஏற்றியிருக்கிறது. 1975–76–க்குப் பிறகு 20 ரூபாய் என்று சொல்வதால் வேறுபாடு 5 ரூபாய் என்று இருக்கும்பொழுது 23 ரூபாய் குவிண்டாலுக்கு அதிகமாக ஏற்றியிருக்க வேண்டும். 23 ரூபாயும் 105 ரூபாயும் சேர்ந்து 128 ரூபாய் கொடுத்துக்கொண்டிருக்க வேண்டும், ஆக்கவலாக. ஆனால்....

1979 அக்டோபர் 31]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கேள்வியா?

திரு. மா. மணிமாறன் : இது முக்கியமான கேள்வி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் இப்படி அனுமதிக்க இயலாது. சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. மா. மணிமாறன் : ஆகையால், இப்பொழுது கொள்முதல் நிர்ணய விலை 18 ரூபாய்க்கு மேலாகக் கூடுகிறது, எனவே வாங்க மறுக்கிறார்கள். ஆகவே, தனிப்பட்ட வியாபாரிகள் நெல்லைக் குறைத்து வாங்குகிறார்கள், இதைத் தடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உஹெரா. எட்மண்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கொள்முதல் நிர்ணய விலைக்கும், வெளியிலே விற்பனை செய்யப் படும் விலைக்கும் உள்ள வேறுபாட்டைப் புரிந்து கொள்ளாமல் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். 1974-75 ஆம் ஆண்டு அரசால் நிர்ணயிக்கப்பட்ட கொள்முதல் விலை 74 ரூபாயாக இருந்தது என்ற நினைவு எனக்கு இருக்கிறது. ஆனால் அந்த நேரத்தில் விளைச்சல் குறைவு என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். வெளிச்சந்தையில் அரிசி ஒரு படி 7 ரூபாய்க்கு விற்ற நேரம் அது. கொள்முதலில் அரசு நிர்ணயித்த விலை எதுவாக இருந்தாலும் வெளிச்சந்தையில் கூடுதலாக வாங்கப்படுவதற்கு நியாயமான காரண காரியங்கள் அன்றைக்கு இருந்தன. வெளிச்சந்தையில் நெல்லின் விலை குறைவாக இருக்கிறது, 95 ரூபாய் என்று மத்திய அரசு நிர்ணயித்து இருக்கிறது, மாநில அரசு விவசாயிகளுக்கு உதவ வேண்டுமென்ற நல்லெண்ணத்தில் முன்பிருந்த கொள்முதல் விலைகளுக்குக் கூடுதலாக 20 ரூபாய் கொடுத்து நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் நெல் வாங்கப்பட்டு வருகிறது.

திரு. துரை கோவிந்தராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் 20 ரூபாய் கூடுதலாகத் தரப்படுகிறது என்று சொல்லி இருக்கிறார்கள், அதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். 18% மாய்ச்சர் கன்டென்ட் குறைவாக இருந்தும், குவிண்டாலுக்கு இரண்டரை ரூபாய் பிடிப்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. க. உஹெரா. எட்மண்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அரசு, மாய்ச்சர் கன்டென்ட்க்கு ஒரு வரம்பு நிர்ணயித்து, அதற்குக் கூடுதலாக இருந்தால் விலை கொடுக்கின்ற நேரத்தில் அதற்கான கழிவு கொடுத்துக் கொள்ளலாம் என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே மத்திய அரசாலும், மாநில அரசாலும் மாய்ச்சர்

கன்டென்ட் குறைவாக இருந்தால் கொடுக்க வேண்டிய விலையைக் கொடுத்து வாங்கவேண்டும். எங்கேனும் தவறுகள் நடந்தால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, விவசாயிகளுக்கு இடுபொருள் விலை உயர்ந்திருக்கிறது, எனவே இந்த நெல்லின் விலை 115 ரூபாய் ஒரு குவிண்டாலுக்குக் கொடுப்பது விவசாயிகளுக்குப் போதாது என்பதை இந்த அரசு உணர்ந்து, 140 ரூபாய் குவிண்டாலுக்குக் கொடுக்க வேண்டும் என்று தஞ்சை மாவட்ட விவசாயிகள் ஆர்ப்பாட்டங்கள், இயக்கங்கள் நடத்துகிறார்களே, எனவே 140 ரூபாய் கிடைக்கத் தமிழக அரசு வேகமாக, துரிதமாக நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் இருக்கும் விவசாயிகள் ஒரு குவிண்டாலுக்கு 140 ரூபாய் கொள்முதல் விலை கொடுக்க வேண்டுமென்று கேட்டிருப்பது பல தடவைகள் அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறது. அரசும் இதைக் கணக்கிட்டு மத்திய அரசிடம் குறைந்தபட்சம் 139 ரூபாயாவது இந்த நெல்லுக்கு விலை நிர்ணயம் செய்ய வேண்டுமென்று வற்புறுத்தித்தான் வந்திருக்கிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கு நன்கு தெரிந்திருக்கும் என்று நம்புகிறேன். நெல்லின் விலையை நிர்ணயிக்கும் அதிகாரம் மத்திய அரசுக்குத்தான் இருக்கிறது. இன்ன விலை கொடுக்க வேண்டுமென்று மாநில அரசுகள் பரிந்துரை கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையில் மாநில அரசு அதை வற்புறுத்தி இருக்கிறது.

மத்திய அரசு ரூ. 95 என்று நிர்ணயித்த காரணத்தாலே ரூ. 95 என்று மத்திய அரசு நிர்ணயிப்பதற்கு முன்னாலேயே மத்திய அரசு என்ன விலை நிர்ணயம் செய்தாலும் அப்போதிருந்த ரூ. 85-க்குக் கூடுதலாக ரூ. 20 கொடுப்போம் என்று இந்த மாநில அரசு அறிவித்தது. மத்திய அரசு ரூ. 85—ஐ ரூ. 95 என்று மாற்றியமைத்த பிறகும் இன்றைக்கு முன்பிருந்த விலைக்கு ரூ. 20—ஐக் கூடுதலாகக் கொடுக்கும் வகையில் விலை மாற்றி அமைக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உணவு அமைச்சருக்கு உடல் நலம் சரியாக இல்லை. ஆகவே, சுருக்கமாக பதில் சொன்னால் போதும்.

திரு. க. அன்பழகன் : பேரவைத் தலைவரவர்களே, நெல் கொள்முதல் விலையை அரசு தீர்மானிப்பது என்பது வெளிச் சந்தை விலையிலே அதிக வீழ்ச்சி ஏற்படாமல் தடுப்பதற்கான ஒரு முறை என்பதை அமைச்சரவர்கள் உணர்வார்கள் என்று

1979 அக்டோபர் 31]

நம்புகிறேன். அந்த வெளிச் சந்தை விலை, அரசு நிர்ணயித்த விலைக்குக் குறைவாக இருக்கிறது என்றுதான் உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினார்கள். அந்த வெளி விலை இறங்குவதைத் தடுக்க மாநில அரசு நிர்ணயித்த விலைக்கு கொள்முதல் செய்வதை அதிகப்படுத்த அரசாங்கம் முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் கேட்டுக் கொண்டபடி விவசாயிகளுக்கு நல்லவிலை கிடைக்க வேண்டுமென்பதற்காகத் தான் கொள்முதல் நிலையங்களை அரசு இன்றைக்கு பல்வேறு இடங்களில் திறந்து அவற்றை வாங்கிக் கொண்டிருக்கின்றன. அரசு கூடுதலாக வாங்க முடியுமா என்று மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் இங்கே ஒரு வினாவை எழுப்பினார்கள். கூடுதலாக வாங்க வேண்டுமென்றுதான் இன்றையதினம் கூடுதலான கொள்முதல் நிலையங்களைத் தஞ்சை மாவட்டத்திலே அரசு திறந்திருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சரவர்கள் பதில் கூறுகிறபொழுது மத்திய அரசு ரூ. 95 என்று விலையை நிர்ணயித்திருந்த போதிலும் அதற்கும் மேலாக ரூ. 20 அதிகமாகக் கொடுத்து கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது என்றார்கள். அதே விலையில் நெல்லின் விலையை நிர்ணயிக்கும்பொறுப்பு மத்திய அரசாங்கத்திடம் இருந்து வருகிறது. மத்திய அரசிடம் ரூ. 125 என்றாவது நெல்லின் விலையை நிர்ணயிக்க வேண்டுமென்றும் தமிழ்நாடு அரசு வற்புறுத்தி வருகிறது என்றும் கூறினார்கள். இதுவரையில் ரூ. 20 அதிகமாகக் கொடுத்ததனால், மத்திய அரசு நிச்சயமாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லையென்று நான் எண்ணுகிறேன். அதுபோல், இன்னும் சற்று அதிகமாகக் கூடுதலாகக் கொடுத்து, மாநில அரசு கொள்முதல் செய்தாலும், மத்திய அரசு அதை ஏற்றுக்கொள்ளும் என்ற காரணத்தால் மேலும் நெல்லின் விலையை மாநில அரசு அதிகரிக்க நடவடிக்கை எடுக்குமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் நிலைமைகளை முழுமையாகப் புரிந்து கொள்ளாமல் இந்தக் கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். ரூ. 20 மாநில அரசு கொடுக்கிறது என்றால், மாநில அரசு நிதியிலேயிருந்து கொடுக்கிறதே தவிர, மத்திய அரசு நிச்சயமாகக் கொடுக்கவில்லை. மத்திய அரசு கூடுதலாகக் கொடுக்க முன்வருமானால் நிச்சயமாக மாநில அரசு இன்னும் அதிகமான தொகையைக் கொடுப்பதைப் பற்றி ஆலோசிக்கலாம்.

[1979 அக்டோபர் 31

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்திலே இதுவரைக்கும் 2 இலட்சம் ஏக்கருக்கு மேல் குறுவை அறுவடை ஆகியிருக்கும் என்று நினைக்கிறேன். இது வரையில் 3 இலட்சம் டன் அறுவடை ஆகியிருக்கிறது. அதில் 2, $2\frac{1}{2}$ இலட்சம் டன் மார்க்கெட்டிற்கு வந்திருக்கும். அதில் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் எவ்வளவு தானியத்தைக் கொள்முதல் செய்திருக்கிறது? வெளி மார்க்கெட்டில் விலை, சர்க்கார் நிர்ணயித்த விலையைவிடக் கீழே இருந்திருக்கிறது. ஆகவே, நீங்கள் அதிக விலை வைத்திருக்கும்போது, கொள்முதல் செய்திருந்தால், பூராவையும் கொள்முதல் செய்திருக்க வேண்டும். எவ்வளவு இதுவரை கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது இருப்பது ப்ரக்யூர்மென்ட் அல்ல, பர்ச்சேஸ். கொள்முதல் அமுலில் இருக்கிறது, கட்டாயக் கொள்முதல் அமுலில் இல்லை. ஆகவே, விவசாயிகள் தங்களுக்குத் தேவையானது போக, வெளி மார்க்கெட்டிலே விற்பனை செய்தது போக, மீதியிருக்கிற நெல்லை, அவர்கள் விரும்பினால் தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்கு கழகத்திடம் விற்கலாம். அவர்களே கொடுத்தால், அதை வாங்குவதற்கான ஏற்பாடுகளை—எவ்வளவு கொடுத்தாலும் வாங்குவதற்கான ஏற்பாடுகளை, இந்தத் துறை இன்றையதினம் செய்திருக்கிறது. அந்த அடிப்படையிலே 26–10–1979 ஆம் தேதி வரையில் ஏறத்தாழ 4?,283 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது கொள்முதலுக்கு ரூ. 20 அதிகமாகக் கொடுத்து, மாநில சர்க்கார் வாங்குவதாகச் சொன்னார்கள். எனக்கு கிடைத்த தகவல் தஞ்சை மாவட்டத்திலே இப்பொழுது 300 கொள்முதல் செய்யக்கூடிய சென்டர்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பதாகவும், அதிலே குறிப்பிட்ட அளவு நெல்தான் வாங்கப்படுகிறது என்றும் சொல்லப்படுகிறது. அது மட்டுமல்லாமல், லாரிகளிலே கொண்டு வருபவர்களிடமும், வியாபாரிகளிடத்திலும்தான் அவர்கள் கொள்முதல் செய்கிறார்களே தவிர, விவசாயிகளிடத்திலே அவர்கள் நேரிடையாகக் கொள்முதல் செய்யவில்லையென்றும், ஒரு மூட்டைக்குக் குவிண்டாலுக்கு ரூ. 90 தான் விலை கிடைக்கிறது என்றும் சொல்லப்படுகிறது. நாம் கொள்முதல் நிலையங்கள் வைத்திருப்பதன் நோக்கமே விவசாயிகளுக்கு ரூ. 20 அதிகமாகக் கொடுக்கவேண்டுமென்பதுதான். எனவே, அதற்காகத் துவக்கப்பட்ட சென்டர்கள் சரியாக இயங்கவில்லையா? அவை சரியாக இயங்க அமைச்சரவர்கள் சரியான நடவடிக்கை எடுப்பார்களா?

(முற்பகல் 9–20)

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் : தலைவரவர்களே, மகொள்முதல் நிலையங்கள் சரியாக இயங்கவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் எந்த அடிப்படையிலே சொல்கிறார்

1979 அக்டோபர் 31]

என்று எனக்குத் தெரியவில்லை. வியாபாரிகளிடத்திலே கிடைக்கிற நெல்லைத்தான் வாங்குகிறார்கள். விவசாயிகளிடத்திலே கிடைக்கிற நெல்லை வாங்குவது இல்லை என்ற குற்றச்சாட்டிற்கு ஆதாரமே இல்லை. எந்த நிலையங்களிலே அவர்கள் விவசாயிகளிடம் இருந்து வரும் நெல்லை வாங்க மறுக்கிறார்கள் என்று தெரிவித்தால் அந்த நிலையத்தில் இருப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

(திருவாளர்கள் க. சுப்பு, ரெ. வீ. சவுந்திரராஜன், இரெ. இராசமாணிக்கம், கோ. இளங்கோவன் முதலியவர்கள் எழுந்தார்கள்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த கேள்வியாக இருந்தாலும் முன் வரிசையிலே இருக்கக்கூடிய அத்தனை பேர்களும் கேட்டுவிட்டார்கள். தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவருக்கு வாய்ப்பு அளிக்க வேண்டாமா? வில்லிவாக்கம் உறுப்பினர் அமரலாம்.

திரு. க. சுப்பு: நெல் தஞ்சாவூரிலே விளைந்தாலும் எல்லோரும் தான் சாப்பிடுகிறோம்.

சென்னை பிற்பட்ட மாணவர்களுக்கான தனிப்பயிற்சி நிலையக் கட்டிடம்.

*வினா 46—திரு. ரா. கு. பெருமாள்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலுள்ள ஸ்பெஷல்-டிரெயினிங் சென்டர்க்கு, நிரந்தரக் கட்டிடம் கட்டவும், அங்கு பயிலும் மாணவர்களுக்கு விடுதி கட்டவும், திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எங்கு, எப்பொழுது?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: (அ) சென்னையிலுள்ள பிற்பட்டோருக்கான தனிப் பயிற்சி நிலையத்திற்கு, நிரந்தரக் கட்டிடம் கட்டும் செயற் குறிப்பு பரிசீலனையில் இருந்து வருகிறது.

(ஆ) எங்கு, எப்பொழுது என்பது இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

திரு. ரா. கு. பெருமாள்: தலைவரவர்களே, சென்னையில் பிற்பட்ட மாணவர்கள் நல விடுதியில் தங்கிப் படிப்பதற்கு மாணவர்களுக்குக் கட்டிட வசதி இல்லாமல் மிகவும் சிரமப்